# OS.No.427/2024, Dated 05.11.2025

The witness sworn under Oaths Act 1969 on this the 05th day of November 2025.

**வா.சா.1 செல்வம் த/பெ கணேசன் வரவழைக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

எனது தகப்பனார் கணேசன் 2001 ஆம் ஆண்டு காலமானார். அந்த சமயத்தில் நான் தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். எனது தகப்பனார் காலமான பின்னிட்டு குடும்பத்தில் மூத்தவர் என்ற முறையில் 1ம் பிரதிவாதி தான் சொத்துகளை பராமரித்து வந்தாரா என்றால் இல்லை. கிராமத்தில் இருந்த சொத்துகளை சுகுமார் தான் பராமரித்து வந்தார். 1ம் பிரதிவாதி ஆசிரியராக இருந்ததால் தாவா சொத்துகளை அவர் நேரடியாக பராமரிக்கவில்லை. மேற்பார்வை மட்டும் செய்துவந்தார். 1ம் பிரதிவாதி தற்போது எங்கு வசிக்கிறார் என்று எனக்கு தெரியாது. எனது மற்றும் சுகுமாரின் வீட்டு நிகழ்வுகளில் அவர் கலந்து கொள்வார் என்றால் சரிதான். ஆனால் வாதிகளாகிய எங்களுக்கும் 1ம் பிரதிவாதிக்கும் சரியான பேச்சுவார்த்தை இல்லை. எனது தகபப்னார் இறந்த பின்னிட்டு குடும்ப சொத்துகளை 1ம் பிரதிவாதி தான் பராமரித்து வந்தார் என்றாலும் தாவா சொத்துகள் முன்னிலைக்கு வாங்கப்பட்ட கடன்களையும் அவர்தான் அடைத்தார் என்றாலும் சரியல்ல. அவர் அடைக்கவில்லை நாங்கள் தான் சொத்துகளை பராமரித்து வந்தோம். அவர் தனிப்பட்ட முறையில் வாங்கிய கடனுக்கு தான் நாங்கள் சொத்தை விற்றோம். நாங்கள் கடனை அடைக்கவில்லை என்றாலும் சொத்துகளை பராமரிப்பதற்கு ஏற்பட்ட கடனை அடைப்பதற்கு தான் 2ம் பிரதிவாதிக்கு சொத்தை விற்றார் என்றால் சரியல்ல. வாதிகள் ஆகிய நாங்கள் வெவ்வேறு ஊர்களில் சொந்த வீட்டில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். தாவா சொத்து உள்ள ஊரில் எனது அப்பாவிற்கு வந்த சொத்தில் சுகுமார் தான் வீடு கட்டி வசித்து வருகிறார் என்றால் 1998 ல் தமயந்தி என்பரிடம் எனது அப்பா கிரையம் வாங்கிய சொத்தில் சுகுமார் வீடு கட்டி வசித்து வருகிறார். அந்த இடத்தில் அவருக்கு

அரசாங்கத்தால் வீடு கட்டிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்து மற்றும் எனது தந்தை பெயரில் உள்ள சொத்துகளை பாகம் பிரிக்கவில்லை என்று 2,3,4 வாதிகள் சாட்சியம் அளிப்பார்களா என்றால் சாட்சியம் அளிப்பார்கள். தாவா சொத்தை நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். நாங்கள் அனுபவித்து வருகிறோம் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளோமா என்றால் ஆவணங்கள் இல்லை. உண்மையில் தாவா சொத்தை 2ம் பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான வருவாய்துறை ஆவணங்களை நான் வாங்கி பரிசீலனை செய்தேனா என்றால் எங்களிடையே பாகப்பிரிவினை ஆகவில்லை என்பதால் நான் வாங்கி பரிசீலனை செய்யவில்லை. எங்கள் குடும்பத்திற்கு சொந்தமான சொத்துகளில் 2ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்து குறித்து மட்டும் தான் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். மற்ற சொத்துகள் குறித்து எங்கிளிடையே பிரச்சனை இல்லை. 2ம் பிரதிவாதி பெயரில் வருவாய்துறை ஆவணங்கள் உள்ளதால் தான் அதை நாங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பே சுகுமார் அடமானம் போட்ட வகையிலும் 1ம் பிரதிவாதியிடம் கிரையம் வாங்கிய வகையிலும் 2ம் பிரதிவாதி தான் தற்போது வரை அனுபவித்து வருகிறார் என்றால் தற்போது நாங்கள் தான் அனுபவதில் உள்ளோம். சுகுமார் சுவாதீனம் இல்லாத அடமானம் தான் செய்தார். 2ம் பிரதிவாதிக்கு சொந்தமான சொத்தை நாங்கள் எப்போதும் அனுபவித்ததே இல்லை என்றாலும் நாங்கள் அனுபவித்ததாக பொய்யாக சொல்கிறோம் என்றால் சரியல்ல. அவ்வாறு நாங்கள் அனுபவித்து இருந்தால் அதற்கான ஆவணங்களை நாங்கள் தாக்கல் செய்திருப்போம் என்றால் எங்களுக்கு தெரியாமல் ஆவணம் ஏற்பட்டதால் எங்களால் ஆவணங்கள் தாக்கல் செய்ய இயலவில்லை. அவ்வாறு தெரியாமல் ஆவணம் எழுதப்பட்ட விபரம் எங்களுக்கு 2019 ஆம் ஆண்டு தான் தெரியவந்தது. தவறான ஆவணம் எழுதப்பட்டது குறித்து காவல்நிலையத்தில்

புகார் கொடுத்தோமா என்றால் புகார் கொடுத்தபோது நீதிமன்றம் மூலம் பார்த்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டார்கள். நாங்கள் பொய்யாக சொல்கிறோம் என்றாலும், அவ்வாறு புகார் கொடுத்திருந்தால் அந்த புகாரின் நகலை இவ்வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு எழுதப்படிக்க தெரியாது என்றாலும் தாவா சொத்தின் மதிப்பு தற்போது அதிகமாகிவிட்டது என்பதால் அந்த சொத்தை அபகரிக்கும் நோக்குடன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நானும் 1ம் பிரதிவாதியும் சகோதரர்கள் என்பதால் பல வருடங்களுக்கு முன்பு 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்த சொத்தை அபகரிக்கும் நோக்குடன் 1ம் பிரதிவாதியுடன் கூட்டு சேர்ந்து இவ்வழக்கை நடத்துகிறோம் என்றால் சரியல்ல. தாவாவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் விபரங்களும் சொத்தின் மதிப்பீடும் தவறானது என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் நாங்கள் தாக்கல் செய்துள்ள தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. இந்த தாவா சொத்து உட்பட எங்கள் குடும்பத்தின் இதர சொத்து குறித்து பாகப்பிரிவனை ஏற்படவில்லை என்பதை நிரூபிப்பதற்கு இதர வாதிகளை நான் சாட்சிகளாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S
Digitally signed by SARANYA S
Date: 2025.11.05 17:27:29 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்